டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
கல்யாண் வெல்லர்ஸ்
agridoctor.in | 6.11.2026 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 117 | Madurai | Online Edition

வேளாண் துறையில் திறன் மேம்பாட்டுக்கான சிறப்பு மையமாக ஹைதராபாத் மேனேஜ் நிறுவனத்திற்கு அங்கீகாரம்

புது தில்லி, நவ.5

மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச் சகத்தின் கீழ் செயல்படும் தன்னாட்சி அமைப்பான ஹைதரா பாத்தில் உள்ள தேசிய வேளாண் விரிவாக்க மேலாண்மை நிறுவனத்திற்கு (மேனேஜ்), வேளாண் துறையில் திறன் மேம்பாட்டுக்கான சிறப்பு மையம் என்ற அங்கீகாரத்தை மத்திய திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகம் வழங்கியுள்ளது. 2026 நவம்பர் 2 அன்று புதுதில்லி கௌல் பவனில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய திறன் மேம்பாட்டுத் துறைச் செயலர் தேபஸ்ரீ முகர்ஜி இந்த அங்கீகாரச் சான்றிதழை வழங்கினார். இந்த அங்கீகாரம் 3 ஆண்டுகளுக்குச் செல்லு படியாகும்.

1987-ம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த நிறுவனம், வேளாண் விரிவாக்க மேலாண்மை, வேளாண் வணிக மேலாண்மை உள்ளிட்ட பல்வேறு முதுகலை பட்டயப் படிப்புகளை வழங்கி வருகிறது. விவசாயத் துறையில் புதுமையான அணுகு றைகளை ஊக்குவிப்பதுடன், விவசாய நிபுணர்களுக்கும், தொழில்முனைவோருக்கும் தேவையான பயிற்சிகளையும், கொள்கை ஆதரவுகளையும் இந்நிறுவனம் வழங்கி வருகிறது.

திறமை வாய்ந்த பணியாளர்களையும், தொழில் முனைவோ ரையும் உருவாக்க வேண்டும் என்ற மத்திய அரசின் தொலை நோக்குப் பார்வைக்கு ஏற்ப, வேளாண் திறன் மேம்பாடு, தொழில் முனைவு நடவடிக்கைகளில் இந்த அமைப்பு தொடர்ந்து பணி யாற்ற இந்த அங்கீகாரம் வழிவகுக்கும் என்று அந்நிறுவனத்தின் தலைமை இயக்குநர் சஞ்சய்குமார் அகர்வால் தெரிவித்து உள்ளார்.

ஆதிதிராவிட விவசாயிகளுக்கு விஆர்ஜ 10 நிலக்கடலை விதைகள் வழங்கும் விழா!



கள்ளக்குறிச்சி, நவ.5 கள்ளக்குறிச்சி மாவட்டம், காளசமுத்திரத்தில் அமைந்துள்ள வேளாண் அறிவியல் நிலையத்தின் சார்பில், முன்னிலை செயல் விளக்க திட்டத்தின் கீழ் எண்ணெய் வித்துப் பயிர்களின் சாகுபடியை ஊக்குவிக்கும் நோக்கில் ஆதிதிராவிட விவசாயிகளுக்கு உயர் விளைச்சல் தரும் புதிய ரகமான விஆர்ஜ 10 நிலக்கடலை விதைகள் வழங்கும் விழா நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு வேளாண் அறிவியல் நிலையத்தின் இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் மொ.ச.கண்ணதாசன் தலைமை தாங்கி, எண்ணெய் வித்துப் பயிர்களின் முக்கியத் துவம், நிலக்கடலை சாகுபடியின் பொருளாதாரப் பயன்கள் மற்றும் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துவதில் அவற்றின் பங்கு குறித்து எடுத்துரைத்தார்.

இதனைத் தொடர்ந்து, வேளாண் தொழில்நுட்ப வல்லுநர் (உழவியல்) மகேஸ்வரன், புதிய விஆர்ஜ 10 நிலக்கடலை ரகத் தின் சிறப்பியல்புகள், அதன் மகசூல் திறன் மற்றும் சாகுபடித் தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கினார். மேலும், நிலம் தயாரித்தல், விதை நேர்த்தி, விதைப்பு முறைகள், சரியான பயிர் இடைவெளி, ஒருங்கிணைந்த உர மேலாண்மை, ஜிப்சம் இடுதல், நிலக்கடலை ரிச் மற்றும் சாம்பல் சத்து உரங்களைப் பயன்படுத்தும் முறைகள் குறித்து விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தார்.

நிலக்கடலையில் அதிக மகசூல் பெறுவதற்கான தொழில் நுட்பங்களுடன், பயிரில் ஏற்படும் இலைப்புள்ளி நோய், துரு நோய் மற்றும் கருகல் நோய் போன்றவற்றின் அறிகுறிகள், தடுப்பு முறைகள் மற்றும் ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

உத்திகள் குறித்தும் விளக்கினார். மேலும், நிலக்கடலையைத் தாக்கும் சிவப்புக் கம்பளிப்புழு, இலைச்சுருட்டுப்புழு மற்றும் காய்களைத் தாக்கும் பூச்சிகளின் பாதிப்புகள் மற்றும் அவற்றைக் கட்டுப்படுத்தும் மேலாண்மை முறைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

வேளாண் அறிவியல் நிலையத்தின் மனையியல் தொழில் நுட்ப வல்லுநர் முனைவர் லாவண்யா, நிலக்கடலையில் இருந்து எண்ணெய், கடலை மிட்டாய், நிலக்கடலை வெண்ணெய் (Peanut Butter) உள்ளிட்ட மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் முறைகள் மற்றும் அவற்றைப் பயன்படுத்தி பல்வேறு உணவுப் பொருட்கள் தயாரிக்கும் தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கத்துடன் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, வேளாண் அறிவியல் நிலையத்தில் இயற்கை முறையில் அமைக்கப்பட்டிருந்த நிலக்கடலை செயல்விளக்கத் திடலை விவசாயிகள் பார்வை யிட்டு, இயற்கை முறையிலான சாகுபடி உத்திகள் குறித்து அறிந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின் நிறைவாக, வேளாண் அறிவியல் நிலையத்தின் இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் மொ.ச. கண்ணதாசன், தேர்வு செய்யப்பட்ட பத்து ஆதிதிராவிட விவசாயி களுக்கு விஆர்ஐ 10 நிலக்கடலை விதைகளை வழங்கினார். இறுதியாக, பண்ணை மேலாளர் முனைவர் ஸ்ரீமதி நன்றியுரை வழங்கினார்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது அக்ரி டாக்டர் வாசகர் என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

விஞ்ஞானிகள் விவசாயிகள் இணைப்பினை வலுப்படுத்தும் கலந்துரையாடல்



மதுரை, நவ.5 மதுரை மாவட்டம், கொட்டாம்பட்டி வட்டாரத்தில் உள்ள அலங்கம்பட்டி கிராமத்தில் மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் கீழ் விஞ்ஞானிகள், விரிவாக்க பணியாளர்கள் மற்றும் விவசாயிகள் இணைப்பினை வலுப்படுத்தும் கலந்துரையாடல் நடைபெற்றது, இதில் அ.ராணி, வேளாண்மை இணை இயக்குனர் (பொறுப்பு) மதுரை, தலைமையில் நடைபெற்றது. தொழில்நுட்ப உரையில் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் கி.சுரேஷ், தொழில்நுட்ப உரையில் விளைநிலம் காப்போம், சமச்சீர் உரபரிந்துரை மற்றும் விவசாயிகளுக்கான ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம், பயிர் சுழற்சி முறை, ஒட்டுண்ணிகள் மற்றும் ஊண்விழுங்கிகள் பயன்பாடு பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். கொட்டாம்பட்டி வட்டார விவசாயிகள் கலந்து கொண்டு பல்வேறு கேள்விகளுக்கு பதில் அளித்தார். கொட்டாம்பட்டி வட்டார துணை இயக்குனர் ஏ.வளர்மதி, வேளாண்மை மத்திய மாநில அரசின் மூலமாக கிடைக்கும் மானிய திட்டங்கள் பற்றி எடுத்துரைத்தார். மேலும் பயிற்சியை அட்மா திட்ட உதவியாளர்கள் ராஜதுரை மற்றும் கண்ணன் ஒருங்கிணைத்து நடத்தினர்.



பயறுவகைப் பயிர்களில் தன்னிறைவு குறித்து மாவட்டத்திற்குள்ளான பயிற்சி



விருதுநகர், நவ.5 வேளாண்மை துறையின் விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் விருதுநகர் மாவட்டம், வ.புதுப்பட்டி கிராமத்தில் பயறுவகைப் பயிர்களில் தன்னிறைவு தலைப்பில் மாவட்டத்திற்குள் பயிற்சி 40 விவசாயிகளுக்கு நடத்தப்பட்டது. இப்பயிற்சி வத்திராயிருப்பு வேளாண்மை உதவி இயக்குனர் சி.செல்வராணி தலைமையில் நடைபெற்றது.

இப்பயிற்சியில் வேளாண்மை உதவி இயக்குனர் சி.செல் வராணி விவசாயிகளை வரவேற்று உளுந்து, பாசிப்பயறு, துவரை மற்றும் மொச்சை ஆகிய பயறு வகை பயிர்களின் உற்பத்தியை பெருக்கி தன்னிறைவு அடைந்திடும் நோக்கில் விவசாயிகள் பயறு சாகுபடி தொழில்நுட்பங்களை கடைப்பிடித்து அதிக மகசூல் பெற்று அதனை மதிப்பு கூட்டல் செய்து விற்பனை செய்திட வலியுறுத்தினார். விவசாயிகளுக்கு வேளாண் விரிவாக்க மையத்தில் மானியத்தில் உள்ள உளுந்து மற்றும் பாசிப்பயறு விதைகளை வாங்கி பயன் பெறுமாறு கேட்டுக் கொண்டார்.

திருவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலைய நோயியல் துறை பேராசிரியர் டாக்டர் விமலா, பயறு சாகுபடி தொழில் நுட்பங் களான சான்றட்டை பொருத்தப்பட்ட தரமான பயறு விதைகள் தேர்வு, அடியுரம் வேப்பம் புண்ணாக்கு இடுதல், ரைசோபியம் உயிர் உரங்களைக் கொண்டு விதை நேர்த்தி செய்து விதைப்பு, களை மேலாண்மை, இரண்டு சதவீத டிஏபி கரைசல் தெளிப்பு, வேளாண் விரிவாக்க மையத்தில் மானிய விலையில் உள்ள பயறு நுண்ணுரங்களை பயன்படுத்துதல், ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை தொழில்நுட்பங்களை கடைபிடித்து அதிக மகசூல் பெறுவது குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

துணை வேளாண்மை அலுவலர் பாலகிருஷ்ணன், வேளாண் விரிவாக்க மையத்தில் நடப்பாண்டில் மானியத்தில் உள்ள

இடுபொருள்கள் இருப்பு விவரம் குறித்தும், பாரதப் பிரதமரின் கௌரவ ஊக்கத்தொகை விவசாயிகள் பெறுவது குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலைய இணை பேராசிரியர் டாக்டர் சரவணன், பயறு உற்பத்தியை பெருக்கவும், விவசாயிகள் குழுக்கள் மூலம் இணைந்து சாகுபடி செய்த பயறுகளை மதிப்புக் கூட்டி விற்பனை செய்திடவும், பருத்தி சாகுபடி விவசாயிகளுக்கும் தண்டு கூன் வண்டு தாக்குதலை கட்டுப்படுத்தும் முறை பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினார்.

கேத் பச்சாவோ அபியான் இயக்கம் – விளைநிலம் காப்போம் விழிப்புணர்வு முகாமில் வறட்சியை தாங்கும் பயிர்கள், பயிர் பல் வகைப்படுத்துதல், வேளாண் காடுகள் அமைத்தல், நுண்ணீர் பாசனம் சிறு குறு விவசாயிகளுக்கு 100% மானியத்தில் அமைத்தல், மற்றும் இயற்கை உரங்களை பயன்படுத்துதல் போன்ற பல தொழில்நுட்பங்கள் எடுத்துரைக்கப்பட்டது.

தங்கப்பழம் வேளாண் கல்லூரியில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவர்கள் ஊரக வேளாண்மை பணி அனுபவத் திட்டத்தில் விவசாயிகளுக்கு உயிரியல் பூச்சி கொல்லிகள் பயன் படுத்தும் முறை பற்றி செயல் விளக்கம் செய்து காட்டினார்கள்.

பயிற்சியின் முடிவில் வத்திராயிருப்பு வட்டார தொழில்நுட்ப மேலாளர் பு ஜோதி மஞ்சுளா விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் விவசாயிகள் முன்னுரிமை பதிவின் அடிப்படையில் செயல் விளக்கங்கள், பண்ணை பள்ளிகள், பயிற்சிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் மற்றும் விவசாய அடையாள அட்டைக்கு விவசாயிகள் பதிவு செய்வதன் அவசியம், அதற்கு தேவையான ஆவணங்கள் மற்றும் பயன்கள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

பயிற்சியின் முடிவில் விவசாயிகளுக்கு எழுந்த சந்தேகங்கள் நிவர்த்தி செய்யப்பட்டது. பயிற்சிக்கான ஏற்பாடுகளை சுபா, உதவி தொழில்நுட்ப மேலாளர் செய்திருந்தார். தங்கப்பழம் வேளாண் கல்லூரி மாணவர்கள் பரத், பொன் பிரதீப், பிரின்ஸ், ரோபின் ராஜ், சாம் பென்னி, செல்வகுமார், சிவா, சுஜித், வேலுமணி கலந்து கொண்டனர்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

ஜீவாமிர்தம் தயாரித்தல் குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கம்!

திருவாரூர், நவ.5

திருவாரூர் மாவட்டம், கோட்டூர் வட்டாரத்திலுள்ள கோட்டூர் தோட்டத்தில், கீழ்வேளூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி





நிலையத்தின் (Agricultural College & Research Institute, Keezhvelur, Nagapattinam) நான்காம் ஆண்டு பி.எஸ்சி. (ஹானர்ஸ்) வேளாண்மை மாணவிகள், கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE Programme) கீழ், விவசாயிகளுக்கு ஜீவாமிர்தம் தயாரித்தல் மற்றும் அதன் பயன்பாடு குறித்து மிருதுளா தேஜஸ் செயல்விளக்கத்தை அளித்தனர்.

ஜீவாமிர்தம் என்பது மாட்டுச்சாணம் (10 கிலோ), மாட்டுச் சிறுநீர் (10 லி), வெல்லம் (2 கிலோ), பயறு வகை மாவு (2 கிலோ), மண் (1 கிலோ) மற்றும் தண்ணீர் (200 லி) ஆகியவற்றைக் கொண்டு தயாரிக்கப்படும் இயற்கை திரவ இடுபொருளாகும். இது மண்ணில் நன்மை பயக்கும் நுண்ணுயிரிகளின் செயல்பாட்டை ஊக்கு விக்கவும், மண் வளத்தை மேம்படுத்தவும் பயன்படுகிறது.

தயாரிக்கும் முறை

முதலில் 200 லிட்டர் கொள்ளளவு கொண்ட பாத்திரத்தில் தண்ணீர் எடுத்துக்கொள்ள வேண்டும். அதனுடன் மாட்டுச்சாணம், மாட்டுச் சிறுநீர், வெல்லம், பயறு வகை மாவு மற்றும் வயல் மண் ஆகியவற்றைச் சேர்த்து நன்கு கலக்க வேண்டும். தயாரிக்கப்பட்ட கலவையை நிழலான இடத்தில் வைத்து, தினமும் காலை மற்றும் மாலை மரக்குச்சியால் நன்கு கலக்க வேண்டும். பொதுவாக 48 மணி நேரம் முதல் 5 நாட்கள் வரை நொதிக்கவிட்டு, தயாரிப்பின் வழிகாட்டுதலுக்கு ஏற்ப பயன்படுத்தலாம்.

ஜீவாமிர்தத்தின் முக்கியத்துவம்

– மண்ணில் நன்மை பயக்கும் நுண்ணுயிர்களின் செயல்பாட்டை ஊக்குவிக்கிறது.

– மண்ணின் உயிரியல் வளத்தை மேம்படுத்த உதவுகிறது.

– இயற்கை வேளாண் முறைகளில் திரவ இடுபொருளாகப் பயன்படுகிறது.

– மண்ணில் ஊட்டச்சத்துக்கள் சுழற்சி நடைபெற உதவுகிறது.

– பண்ணையில் கிடைக்கும் உள்ளூர் மூலப்பொருட்களைக் கொண்டு குறைந்த செலவில் தயாரிக்கலாம்.

இந்தச் செயல்விளக்கத்தின் மூலம் விவசாயிகளுக்கு ஜீவாமிர்தம் தயாரிக்கும் முறை, தேவையான மூலப்பொருட்கள், கலக்கும் நடைமுறை மற்றும் அதன் வேளாண் பயன்பாடுகள் குறித்து விளக்கப்பட்டது. இயற்கை வளங்களைப் பயன்படுத்தி மண் வளத்தைப் பாதுகாக்கும் வேளாண் முறைகளைப் பின்பற்றுவதன் அவசியமும் எடுத்துரைக்கப்பட்டது.

கார்த்திகை பட்ட நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூலுக்கு தரமான விதை தேர்வு!



பெரம்பலூர், நவ.5

பொதுவாக கார்த்திகை பட்டம் என்பது கார்த்திகை மற்றும் மார்கழி மாதங்களில் (நவம்பர், டிசம்பர்) விதைப்பு செய்யப்பட்டு வருவதாகும். கார்த்திகை மாதத் திற்குள் நிலக்கடலை விதைப்பு செய்தால் அதிக மகசூலுக்கு வாய்ப்பை அளிக்கிறது. இந்த பட்டத்தில் சாகுபடி செய்யும் போது போதிய மழை, சரியான தட்பவெப்பநிலை சாதகமாக இருப்பதால் அதிக மகசூல் பெறப்படுகிறது.

நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூலைப் பெற அந்த பகுதிகளுக்கு ஏற்ற குறைந்த வயதுடைய உயர் விளைச்சல் இரகங்களை தேர்வு செய்து, அந்த இரகங்களின் தரமான விதைகளை பயன்படுத்துவது முக்கியமான ஒன்றாகும். முளைக்கட்டி விதைத்தல் முறையை கடைப்பிடித்து முளை கட்டிய விதைகள் மற்றும் இறந்த விதைகளை தனியே பிரித்து எடுத்துவிட வேண்டும். இவ்வாறு நல்ல தரமான விதைகளை தேர்வு செய்து விதைப்புக்கு பயன்படுத்த வேண்டும்.

பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் கார்த்திகை மற்றும் மார்கழி மாதங்களில் அதிக அளவில் நிலக்கடலை சாகுபடி செய்யப்படுகிறது. விருத்தாச்சலம் (விஆர்ஜ - 2, விஆர்ஜ (ஜீ என்-6), விஆர்ஜ-8, விஆர்ஜ-10) மற்றும் திண்டிவனம் (டிஎம்வி-7, டிஎம்வி-14) போன்ற இரகங்கள் பயிரிடப்படுகிறது. தற்போது சில வருடங் களாக குஜராத் இரக நிலக்கடலை (ஜிஜேஜி-9, கிர்னார்-4, கிர்னார்-5, ஜிஜி-40) மற்றும் ஆந்திரா இரக நிலக்கடலை தரணி (டிசிஜிஎஸ்-1043), கே- 1812 கதிரிலிபாக்ஷி போன்ற இரகங்கள் பரவலாக சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன.

பயிரிடும் விதை தரமானதாக இருப்பது அவசியம் என்பதால், விதையின் தரத்தை அறிந்திட அரசு விதை பரிசோதனை நிலையங்களில் பரிசோதித்து கொள்ளலாம். விதையின் தர நிர்ணய காரணிகளான முளைப்புத்திறன், புறத்தூய்மை மற்றும் ஈரப்பதம் போன்றவை பரிசோதனை செய்யப்படுகின்றன.

தரமான நிலக்கடலை விதை என்பது குறைந்தபட்சம் 70 சதவீதம் முளைப்புத்திறனும், அதிகபட்சமாக 9 சதவீதம் ஈரப்பதமும், குறைந்தபட்சமாக 96 சதவீதம் புறத்தூய்மையும், பூச்சி நோய் தாக்குதலின்றி இருத்தல் அவசியம்.

பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டத்திற்கான விதை பரிசோதனை நிலையமானது பெரம்பலூர் புதிய பேருந்து நிலையம் அருகில், மாவட்ட மைய நூலகம் மேல்புறம், துறைமங்கலம், பெரம்பலூர் - 621220 என்ற முகவரியில் செயல்படுகிறது. விதை பரிசோதனை நிலையத்தில் ஒரு விதை மாதிரிக்கு பரிசோதனை கட்டணமாக ரூ.80/- செலுத்தி பயிர் மற்றும் இரகம், குவியல் எண் ஆகியவை குறித்த விபரச் சீட்டுகளுடன் நிலக்கடலை விதை 500 கிராம் அளவிற்கு விதை மாதிரி எடுத்து அனுப்பி விதைகளை பரிசோதனை செய்து கொள்ளலாம்.

இச்செய்தி குறிப்பினை பெரம்பலூர் விதை பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர்கள் ரெ.ஆஷாலதா மற்றும் ரா.அம்பிகா ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

தேனீ வளர்ப்பு பண்ணையில் வேளாண் மாணவர்கள் களப்பயணம்!



திருவண்ணாமலை, நவ.5

பாலாறு வேளாண்மைக் கல்லூரியில் பயிலும் இறுதியாண்டு வேளாண் பட்டப் படிப்பு மாணவர்கள், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதி யாக, நவம்பர் 3ஆம் தேதி பெரிய குரும்பத் தெருவில் அமைந்துள்ள காசமால் இயற்கை தேனீ பண்ணைக்கு களப்பயணம் மேற்கொண்டனர்.

இப்பயணத்தின் போது மாணவர்கள் தேனீ வளர்ப்பு முறைகள், தேன் சேகரிக்கும் தொழில்நுட்பங்கள், தேனீக்களின் வாழ்க்கைச் சுழற்சி, தேனீக்களின் முக்கியத்துவம் மற்றும் தேன் உற்பத்தி முறைகள் குறித்து அறிந்து கொண்டனர். மேலும், பயிர்களில் மகரந்தச் சேர்க்கை நடைபெறுவதில் தேனீக்களின் பங்கு, இயற்கை விவசாயத்தில் தேனீ வளர்ப்பின் முக்கியத்துவம் மற்றும் தேனீ வளர்ப்பின் மூலம் விவசாயிகள் கூடுதல் வருமானம் பெறும் வழிமுறைகள் குறித்தும் விளக்கமாகத் தெரிந்து கொண்டனர். இந்தக் களப்பயணம் மாணவர்களுக்கு தேனீ வளர்ப்பு மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாப்பது குறித்த நடைமுறை அறிவையும், அனுபவத்தையும் வழங்கியது.

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

உழவர்களுக்கு இனி அடையாள எண் கட்டாயம் தேவை? எதற்காக?



விவசாயிகளுக்கு இனி உழவர் அடையாள எண் (FARMER REGISTRATION NUMBER) 11 இலக்கு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இனிமேல் விவசாயிகள் தங்களுடைய தேவைகள், சலுகைகள் மானியங்கள் பெற இந்த அடையாள எண் தேவைப்படுகிறது. வேளாண் அடுக்கு (AGRI STACK) உழவர் அடையாள எண் அடிப்படையில் தான் விவசாயிகள் தங்களுடைய சாகுபடிகேற்ற பயிருக்கு மானிய விலையில் உரம் பெற முடியும்.

இதற்கு முன்பாக உரம் பெறும் நிலை என்ன?

இதுவரை உரம் வாங்கிட விவசாயிகள் தங்களுடைய ஆதார் எண்ணை அடிப்படையாகக் கொண்டு (ப்ராயிண்ட் ஆப்சேல்) POS MACHINE-யில் விபரங்களை பதிவு செய்து உரங்களை தனியார் கடைகள்/கூட்டுறவு கடன் சங்கங்களில் பெற்று வந்தனர். இந்த நடைமுறை மாற்றப்பட்டு புதிய நடைமுறையான (FFS) FRAME WORK FOR FERTILIZERS SALES) தற்போது அமுல்படுத்தப்பட்டு உர விற்பனை செய்யப்படுகிறது. இதற்கு கண்டிப்பாக பார்மர் ஐ.டி எண் தேவைப்படுகிறது.

எனவே இதுவரை அடையாள அட்டை பெறாத விவசாயிகள் உடனடியாக (AGRI STACK- TAMIL NADU FARMER REGISTRY) யில் தங்களது நில உடமைகளை தங்களுடைய ஆதார் எண்ணுடன் இணைத்து புதிய உழவர் அடையாள எண் (FARMER REGISTRATION NUMBER) பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஏற்கனவே பதிவு செய்து அடையாள எண் வந்துள்ள விவசாயிகள் தங்களிடமுள்ள அனைத்து புல எண்களையும் (SURVEY NO) தங்களுடைய ஆதார் எண்ணுடன் இணைத்துக் கொள்ள வேண்டும். இணைக்க விட்டால் அந்த நிலப்பரப்பிற்கு எந்த சலுகைகள் பெறமுடியாது. இனி மானிய விலையில் உரங்கள் தங்களின் விவசாய நிலப்பரப்பின் அடிப்படையாக மட்டுமே வழங்கப்படும்.

இச்சேவையை பெற அருகேயுள்ள பொது இ.சேவை மையத்தையோ/உதவி வேளாண்மை இயக்குநர் அலுவலகத்தையோ அணுகி தங்களுடைய புல எண்களுடன் ஆதார் இணைத்துக் கொள்ள வேண்டும்.

அடையாள எண் பெறுவதால் விவசாயிகளுக்கு என்ன பயன்?

மானிய உரம் பெறுவதற்கு மட்டுமின்றி, அரசின் பல்வேறு வேளாண்மை திட்டங்களான பிரதம மந்திரியின் கௌரவத் திட்டம், பயிர் காப்பீடு (INSURANCE) மற்றும் அரசின் இதர திட்டங்கள் சலுகைகள் மானியம் பெறுவதற்கு அவசியமாக உழவர் அடையாள எண் தேவை.

என்ன நீங்க வாங்கியாச்சா?. நான் வாங்க போறேன் உடனே!!

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

ஏற்காட்டில் விவசாயிகள் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் நிகழ்வு



சேலம், நவ.5

சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டாரத்தில் இரண்டு நாள் பயிற்சியாக விவசாயிகள் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் ஏற்காடு தோட்டக் கலை ஆராய்ச்சி மையத்தில் நடைபெற்றது. வேளாண்மை இணை இயக்குனர் வேளாண் உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குனர் மற்றும் வேளாண்மை அலுவலர் கலந்து கொண்டனர். இதில் வேளாண்மை துறை மற்றும் தோட்டக்கலைத்துறை கால்நடைத் துறை பட்டு வளர்ச்சித் துறை மீன்வளத்துறை மற்றும் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் ஆராய்ச்சியாளர்கள் கலந்து கொண்டனர். இதில் சேலம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வேளாண்மைத் துறையில் உள்ள திட்டங்களை மற்றும் மானியங்களை எடுத்துரைத்தார். இதே போல கால்நடைத்துறையில் சேலம் மாவட்டம் ஆராய்ச்சி நிலையத்தி லிருந்து ஆராய்ச்சியாளர்கள் மாடு மற்றும் ஆடுகளில் ஏற்படும் நோய்கள் மற்றும் பராமரிப்பு முறையில் எடுத்துரைத்தனர். பட்டு வளர்ச்சி துறையில் பட்டு வளர்ப்பு திட்டங்கள் மற்றும் மாநிலங்கள் எடுத்துரைத்தனர். வேளாண்மை துறையில் இருந்து காபி மற்றும் மிளகில் ஏற்படும் நோய்கள் சிறுதானிய மகசூல் நோய்கள் அதற்கான தீர்வு முறைகளை எடுத்துரைத்தனர். இதன் மூலம் விவசாயிகள் தங்கள் கேள்விகான பதில்களை கேட்டு அறிந்து பயனடைந்தனர். இதற்கான ஏற்பாடுகளை ஆத்மா அலுவலர்கள் செய்திருந்தனர்.

தென்னையில் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈ கட்டுப்படுத்தும் முறை குறித்து செயல்விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



திருவாரூர், நவ.5

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டாரத்தில், செயல்படுத்தப்பட்டு வரும் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ், கீழ்வேளூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதியாண்டு வேளாண் மாணவர்கள் அப்துல்லா, ஆகாஷ், பாலாஜி, இனிய அஸ்வின், ஜெயசூர்யா, பெய்ஸல் செப்பர்டு, பிரித்திவிராஜ், சந்தோஷ், சத்திய சீலன், சுதர்சன், வினோத் குமார் ஆகியோர் திருபாற்கடல் கிராமத்தில் தென்னையைத் தாக்கும் சுருள் வெள்ளை ஈயின் தாக்குதலை மற்றும் அதனைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்.

இச்செயல்விளக்கத்தில் சுருள் வெள்ளை ஈயின் வாழ்க்கைச் சுழற்சி மற்றும் இலையின் அடிப்பகுதியில் காணப்படும் சுருள் வடிவ முட்டைகள், வெள்ளை நிற மெழுகுப் படலம் மற்றும் தேன் போன்ற பிசுபிசுப்பான திரவம் சுரத்தல் ஆகியவை தாக்குதலின் அறிகுறிகளாக எடுத்துரைத்தனர்.

இதனைக் கட்டுப்படுத்தும் வகையில் மஞ்சள் நிற ஒட்டும் பொறியின் பயன்பாடும் மற்றும் வேப்பஎண்ணெயின் பயன்பாட்டையும் விளக்கினர் மற்றும் இயற்கை எதிரிகளான என்கார்சியா ஒட்டுண்ணிகளை பாதுகாக்கப்பட வேண்டிய அவசியத்தையும் எடுத்துரைத்தனர். இதனைத் தொடர்ந்து சுருள் வெள்ளை ஈயினால் பரவும் கரும்பூசன நோயை கட்டுப்படுத்த மைதா கரைசலின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தனர்.

இதன் மூலம் தென்னையில் சுருள் வெள்ளை ஈயின் தாக்கு தலை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகளைப் பின்பற்றுவதை குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இச்செயல்விளக்கத்தில் விவசாயிகள் ஆர்வத் துடன் பங்கேற்று பயனடைந்தனர்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்



இப்கோ நானோ டி.ஏ.பி - ஒரு பார்வை

சென்னை, நவ.5

நானோ டி.ஏ.பி திரவ உரத்தில் 8% தழைச்சத்தும் 16% மணிச்சத்தும் உள்ளது. நானோ டி.ஏ.பியைப் பயன்படுத்தி விதைநேர்த்தி செய்கையில் விதைகளின் முளைப்புத்திறன் மற்றும் வீரியத் தன்மை அதிகரிக்கிறது. மேலும், பயிரின் வளர்ச்சி, தரம் மற்றும் மகசூலையும் அதிகரிக்கிறது.

பயன்படுத்தும் முறை : ஒரு மூடி நானோ டி.ஏ.பி பாட்டிலின் அளவு = 25 மி.லி)



விதை நேர்த்தி

ஒரு கிலோ விதைக்கு, 3 - 5 மி.லி நானோ டி.ஏ.பியைத் தேவையான அளவு நீரில் கலந்து விதையின் மேற்பரப்பில் ஒரு மெல்லிய படலம் போல் உருவாகச் செய்து, 25 முதல் 30 நிமிடம் வரை வைத்து, பின்பு நிழலில் உலர்த்தி விதைப்பு செய்ய வேண்டும்.

வேர் / கிழங்கு / கரணை நேர்த்தி

தேவையான அளவு நீரில் நானோ டி.ஏ.பி திரவத்தை, ஒரு லிட்டர் நீருக்கு, 3-5 மி.லி என்ற அளவில் கலந்து நாற்றுகள் / கிழங்குகள் / கரணைகளை 20-30 நிமிடம் ஊற வைத்து, பின்பு நிழலில் உலர்த்தி நடவு செய்ய வேண்டும்.

இலைவழி தெளிப்பு

2-4 மி.லி நானோ டி.ஏ.பியை ஒரு லிட்டர் நீரில் கலந்து பயிரின் முக்கிய வளர்ச்சி பருவங்களான (கிளைப்பு, துளிர் விடும்) தருவாயில் தெளிக்க வேண்டும்.

அதிகமாக மணிச்சத்து தேவைப்படும் பயிர்கள் மற்றும் நீண்டகால பயிர்களுக்கு நானோ டி.ஏ.பியை இரண்டாம் தெளிப்பாக பூக்கும் பருவத்திற்கு முன் தெளிக்கவும்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

விதைகளை பரிசோதிக்க விவசாயிகளுக்கு அழைப்பு!

திருவண்ணாமலை, நவ.5

தற்போது வடகிழக்கு பருவமழை தொடங்கி இருப்பதால் சில இடங்களில் மிதமாகவும் மற்றும் சில இடங்களில் அதிகளவில் மழை பெய்து கொண்டு இருப்பதால் விவசாயிகள் தங்களிடம் உள்ள விதைகள் ADT (R) 45, ADT 37, CO 51 மற்றும் மணிலா, உளுந்து போன்ற விதைகளை விதைப்பிற்கு முன் விதைகளின் தரத்தினை பரிசோதனை செய்து கொள்ளலாம். விதைகளை பரிசோதனை செய்வதன் மூலம் இடுபொருட்கள் செலவினை குறைத்து தரமான விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டும். குறைந்த செலவில் அதிக மகசூல் பெற விதை பரிசோதனை செய்தபின் விதைகளை பயன்படுத்துவதன் மூலம் விதைகளின் முளைப்புதிறன் குறைபாடு இல்லாமல் இருப்பதையும் விதைகளில் பிற இரக விதைகள் உள்ளதா என்பதை அறிவதன் மூலம் கலப்பு விதைகள் பயன்படுத்துவதை தவிர்க்கலாம்.

மேலும் விதையின் ஈரப்பதம் மற்றும் சுத்தத்தன்மை ஆகிய வற்றை அறிந்து பயன்படுத்துவதன் மூலம் பயன்படுத்தும் விதைகள் முளைக்க தரமானதா என்பதை தெரிந்து கொள்ள லாம். திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அரசு விதைப்பரிசோதனை நிலையத்தில் விவசாய பெருமக்கள் தங்களிடம் உள்ள விதைகளை அனுப்பி அவற்றின் ஈரப்பதம், பிற இரககலவன், முளைப்புத்திறன், புறத்தூய்மை மற்றும் பூச்சி நோய் தாக்குதல் ஆகியனவற்றை பரிசோதனை செய்து அதன் பின்பு விதைப்பு செய்து அதிக மகசூல் பெற்று கூடுதல் லாபம் பெறுமாறு கேட்டுக் கொள்ளளப்படுகின்றது. விதை மாதிரிகளை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம். விதைகளை அனுப்பும் போது பயிரின் பெயர், இரகம் மற்றும் குவியல் எண் ஆகியவை குறிப்பிட்ட விண்ணப்ப படிவத்துடன் ஒரு மாதிரிக்கு ரூபாய் 80/- வீதம் விதைப்பரிசோதனைக் கட்டணம் சேர்த்து அனுப்புதல் வேண்டும். விதை மாதிரிகளை மூத்த வேளாண்மை அலுவலர், விதைப்பரிசோதனை நிலையம், டாங்காப் கட்டிடம், வேங்கிக்கால், திருவண்ணாமலை 606 604 என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

விளைநிலம் காப்போம் நிகழ்ச்சி



கடலூர், நவ.5 கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தாசலம் சார்பாக 05.11.26 அன்று, ஸ்ரீமுஷ்ணம், பரங்கிப்பேட்டை மற்றும் மேல்புவனகிரி வட்டாரத்தில் உள்ள பாளையங்கோட்டை, தச்சக்காடு மற்றும் தில்லைநாயகபுரம் ஆகிய கிராமங்களில், விளைநிலம் காப்போம் நிகழ்ச்சி நடைப்பெற்றது.

இந்நிகழ்ச்சியை மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் க.நடராஜன், துவக்கி வைத்து, மண்வளம் பாதுகாக்கும் வழிமுறைகள் பற்றி எடுத்துரைத்தார். இதில் முனைவர்கள் சு ஜெய்வேலு, சத்தியநாராயணன் மற்றும் கமலக்கண்ணன் ஆகியோர் கலந்துக்கொண்டு, நிலங்களின் சத்துக்களுக்கு ஏற்றவாறு உரபரிந்துரையும், யூரியா மற்றும் டி.ஏ.பி அதிகமாக பயன்படுத்துவதால் நிலத்திற்கு ஏற்படும் தீமைகளை பற்றி விளக்கினார். உயிர் உரங்கள், பசுந்தாள் உரங்கள் மற்றும் தொழுஉரங்கள் பயன்பாடுகளை அதிகரிப்பதன் மூலம் மண்ணில் பேரூட்டம் மற்றும் நுண்ணூட்ட சத்துக்கள் மேம்ப்பாடு பற்றியும் மற்றும் மண்ணிற்கு உரமிடும் போது மண்வள அட்டையில் பரிந்துரைத்த உர பரிந்துரைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக் கொண்டு மத்திய மாநில திட்டங்கள் பற்றி தெளிவாக விவசாயிகளுக்கு விளக்கினர். இப்பயிற்சியில் கடலூர் மாவட்டம், ஸ்ரீமுஷ்ணம், பரங்கிப்பேட்டை மற்றும் மேல்புவனகிரி வட்டாரத்தை சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

தேனீ வளர்ப்பு பயிற்சி நிறைவு விழா!

மதுரை, நவ.5

மதுரை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் 12.10.26 முதல் 5.11.26 பள்ளி மாணவர்களுக்கான தேனீ வளர்ப்பு பயிற்சி நடைபெற்றது. பயிற்சியின் நிறைவு விழா 5.11.26 அன்று நடைபெற்றது.



இந்நிகழ்ச்சிக்கு மதுரை மண்டல கடவுச்சீட்டு அதிகாரி முனைவர் வசந்தன், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். அவர் தனது சிறப்பு உரையில் மாணவர்கள் கற்றுக்கொண்ட தொழில்நுட்பங்களை உபயோகித்து சிறந்த தொழில் முனைவோராக மாற வேண்டும் என எடுத்துரைத்தார். முன்னதாக வேளாண் அறிவியல் நிலைய மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் கி.சுரேஷ் வரவேற்புரை ஆற்றினார். பயிரின பெருக்கம் மற்றும் மரபியல் துறை தொழில்நுட்ப வல்லுநர் முனைவர் கு.ஆனந்த் நன்றி உரை ஆற்றினார். வேளாண் அறிவியல் நிலைய தொழில்நுட்ப வல்லுநர்கள் முனைவர்கள் அருளரசு, சுப்பிரமணியன், செல்வராணி, ஜோதிலட்சுமி, சரவணன், நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயிற்சி குறித்த கருத்துகளை பகிர்ந்து கொண்டனர். தேனீ வளர்ப்பு குறித்த தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

இயற்கை வேளாண்மையில் எருக்கு இலையின் பங்கு!

தஞ்சாவூர், நவ.5



தஞ்சாவூர் மாவட்டம், காட்டுத் தோட்டம் வேளாண் ஆராய்ச்சி நிலையத்தின் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்ட மாணவிகள், காசநாடு புதூர் கிராம விவசாயிகளுக்கு எருக்கு இலை பசுந்தாள் உரத்தின் பயன்பாடு மற்றும் அதன் நன்மைகள் குறித்து செயல் விளக்கம் அளித்தனர்.

இயற்கை முறையில் மண்ணின் வளத்தை மேம்படுத்துவதற்கும், பயிர்களின் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் எருக்கு இலைகளைப் பயன்படுத்தும் முறைகள் குறித்து எடுத்துரைத்தனர்.

எருக்கு இயற்கையாகக் கிடைக்கக்கூடிய தாவரமாகும். இதன் இலைகள் மற்றும் பிற தாவரப் பகுதிகளை மண்ணில் மட்கச் செய்வதன் மூலம் மண்ணில் கரிமப் பொருட்களின் அளவை அதிகரிக்கலாம். இதனால் மண்ணின் இயற்பியல் பண்புகள் மேம்படுவதுடன், மண்ணின் வளத்தையும் பாதுகாக்க உதவுகிறது.

தொடர்ந்து, எருக்கு செடியின் இலைகளைச் சேகரித்தல், அவற்றைச் சிறிய துண்டுகளாக நறுக்குதல் மற்றும் வயலில் பரப்புதல் போன்ற செயல்முறைகள் குறித்து மாணவிகள் விவசாயி களுக்கு விளக்கினர். இலைகளை மண்ணுடன் கலந்து மக்கச் செய்வதன் மூலம் அவை இயற்கை உரமாக மாறும் முறையும் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், எருக்கு இலைகள் மண்ணில் மக்கும்போது கரிமச் சத்துகளை வழங்குவதுடன், மண்ணின் நீர் பிடிப்புத்திறன் மற்றும் மண் கட்டமைப்பை மேம்படுத்த உதவுகின்றன. மண்ணில் உள்ள நன்மை செய்யும் நுண்ணுயிர்களின் செயல்பாட்டிற்கும் கரிமப் பொருட்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன என்பதை மாணவிகள் விளக்கினர்.

இறுதியாக, இயற்கை வளங்களைச் சரியான முறையில் பயன்படுத்தி மண் வளத்தைப் பாதுகாப்பதன் அவசியம் குறித்தும், குறைந்த செலவில் கிடைக்கும் உள்ளூர் தாவர வளங்களை வேளாண்மையில் பயன்படுத்துவதன் நன்மைகள் குறித்தும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இச்செயல்விளக்கம் விவசாயிகளுக்கு இயற்கை உரங்களின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ள உதவும் வகையில் அமைந்தது.

வில்லிபாளையத்தில் பயிர் சாகுபடி முறைகள் குறித்த திறன் மேம்பாட்டுப் பயிற்சி

நாமக்கல், நவ.5

நாமக்கல் மாவட்டம், பரமத்தி வட்டாரம், வில்லிபாளையம் கிராமத்தில் 29.10.26 அன்று பயிர் சாகுபடி முறைகள் குறித்த திறன் மேம்பாட்டுப் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில், வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கரூரைச் சேர்ந்த மாணவர்கள் கிராமப்புற வேலை நிறைமைப் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் பங்கேற்றனர்.



இந்நிகழ்ச்சியில் பரமத்தி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் தி.சுதா, வேளாண்மை அலுவலர் அன்புச்செல்வி, ஆத்மா திட்டப் பிரதிநிதிகள் ஜோதி மற்றும் ரவீனா ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஓய்வு பெற்ற பேராசிரியர் முனைவர் அப்பாவு சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்.

முனைவர் அப்பாவு மண் மற்றும் நீர் மாசுபாட்டைத் தடுக்கும் வழிமுறைகள், மண் வளப் பாதுகாப்பு, நீர் மேலாண்மை மற்றும் தென்னை சாகுபடி முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார். மேலும், விவசாயிகளின் குறைகளைக் கேட்டறிந்து, அவற்றுக்குத் தேவையான தொழில்நுட்ப ஆலோசனை களையும் தீர்வுகளையும் வழங்கினார்.

தொடர்ந்து, வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள் எண்ணெய் வித்துப் பயிர்களில் தன்னிறைவு அடைவதன் அவசியம் குறித்தும், சுரபி பருத்தி ரகத்தின் சிறப்பம்சங்கள் மற்றும் அதன் சாகுபடி நன்மைகள் குறித்தும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

பரமத்தி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மற்றும் வேளாண்மை அலுவலர் ஆகியோர் வேளாண்மைத் துறையின் பல்வேறு அரசுத் திட்டங்கள், விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானியங்கள், அவற்றைப் பெறுவதற்கான தகுதிகள் மற்றும் நடைமுறைகள் குறித்து விளக்கினர்.

இதனைத் தொடர்ந்து, கிராமப்புற வேலைநிறைமைப் பணி அனுபவத் திட்ட மாணவர்கள் விவசாயிகளுடன் கலந்துரையாடி, அவர்களின் சாகுபடிப் பிரச்சினைகள் மற்றும் குறைகளைக் கேட்டறிந்து பதிவு செய்தனர். மேலும், விவசாயிகளின் பிரச்சினைகளுக்குப் பொருத்தமான தீர்வுகளையும் தொழில்நுட்ப ஆலோசனைகளையும் வழங்கினர். இப்பயிற்சியில் அப்பகுதியைச் சேர்ந்த ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

முந்திரி பருப்பு உற்பத்தி முதல் தரம் பிரித்தல் வரை – வேளாண் மாணவிகளின் நேரடிப் பங்களிப்பு!

கடலூர், நவ.5

திருச்சி, அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE – Rural Agricultural Work Experience) கீழ் பயிற்சி பெற்று வரும் மாணவிகளான ரித்திகா, சஹானா ஷாஜிதா, சாலினி, சந்தியா, ஷஹானா, ஷாலினி, சிந்துஜா, சௌமியா, ஸ்ரீ துர்கா, ஸ்ரீபிரியா மற்றும் சுபிதா ஆகிய 11 பேரும் கடலூர் மாவட்டம்,





விருத்தாசலம் வட்டம், நருமணம் கிராமத்தில் அமைந்துள்ள J.R.ரிஷி மித்ரா முந்திரி பதப்படுத்தும் தொழிற்சாலைக்குக் களப்பயணம் மேற்கொண்டனர். இப்பயணத்தின் போது ஜெயங்கர் மற்றும் தமிழரசி ஆகியோர் முந்திரி பதப்படுத்தும் முறைகள், இயந்திரங்களின் பயன்பாடு மற்றும் உற்பத்தியின் பல்வேறு நிலைகள் குறித்து மாணவிகளுக்கு விரிவாக விளக்கினர்.

தொழிற்சாலையில் முதலில் ஓட்டுடன் கூடிய முந்திரி கொட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டு, அவை கொதிக்க வைக்கப்படுகின்றன. பின்னர் இயந்திரத்தின் உதவியுடன் அவற்றின் கடினமான வெளிப்புற ஓடுகள் உடைக்கப்படுகின்றன. தொடர்ந்து, தொழி லாளர்கள் கைகளால் முந்திரி பருப்பையும் அதன் வெளிப்புற ஓட்டையும் தனித்தனியாகப் பிரித்தெடுக்கின்றனர்.

இந்தச் செயல்முறையில் மாணவிகளும் தொழிலாளர்களுடன் இணைந்து இயந்திரத்தின் மூலம் முந்திரி ஓடுகளை உடைத்தல் மற்றும் கைகளால் ஓடுகைளப் பிரித்தெடுத்தல் போன்ற பணிகளில் நேரடியாக ஈடுபட்டு செய்முறைப் பயிற்சி பெற்றனர். மேலும், முந்திரி ஓட்டிலிருந்து வெளிவரும் எண்ணெய்த் தன்மையால் ஏற்படும் ஒட்டும் தன்மையத் தவிர்க்க, கையுறைகைள அணிந்து விரல் நுனிகளில் சுண்ணாம்பு தடவிப் பணியாற்றும் முறையும் அறிந்து கொண்டனர். பிரித்தெடுக்கப்பட்ட முந்திரி பருப்புகள் தட்டுகளில் நிரப்பப்பட்டு, போர்மா (Borma) உலர்த்தும் பெட்டியில் வெப்ப மூட்டப்படுகின்றன. பின்னர் குளிர்விக்கும் அறையில் வைத்து ஆறவிடப்படுகின்றன. தொடர்ந்து, தோல் நீக்குதல் (Peeling), குறைபாடுள்ள மற்றும் கருமை நிறமுள்ள பருப்புகளை நீக்குதல் போன்ற செயல்முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இறுதியாக, முந்திரி பருப்புகள் அவற்றின் நிறம், அளவு மற்றும் முழுமைத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் தரம் பிரித்தல் (Grading) செய்யப்படுகின்றன. இதற்காக நிற அட்டவணை (Colour Chart) மற்றும் அளவீட்டு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு தரம் பிரிக்கப்பட்ட முந்திரி பருப்புகள் தனித்தனியாகப் பொதியிடப்படுகின்றன (Packaging). இந்தக் களப்பயணத்தின் மூலம் மாணவிகள் முந்திரி பதப்படுத்தும் தொழில்நுட்பம், இயந்திரங் களின் பயன்பாடு, தொழிலாளர்களின் பங்களிப்பு, தரம் பிரித்தல் மற்றும் மதிப்புக்கூட்டல் செயல்முறைகள் குறித்து நடைமுறை அறிவைப் பெற்றனர்.

அதனூர்பட்டி கிராமத்தில் விவசாயிகளுக்கு வாளி பொறி (Bucket Trap) குறித்த பயிற்சி!



சேலம், நவ.5

சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டம், அதனூர்பட்டி கிராமத்தில் தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மைக் கல்லூரி, பெரம்பலூர் மாணவர்கள் சார்பில் விவசாயிகளுக்கான விழிப்புணர்வு மற்றும் பயிற்சி நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பயிர்களில் ஏற்படும் பூச்சித் தாக்குதல்களைக் கட்டுப்படுத்துவதற்கான எளிய மற்றும் செலவு குறைந்த தொழில்நுட்பமான வாளி பொறி (Bucket Trap) அமைக்கும் முறை மற்றும் அதன் பயன்பாடுகள் குறித்து விவசாயிகளுக்கு விரிவான பயிற்சி அளிக்கப்பட்டது.

வாளி பொறி என்பது பயிர்களைத் தாக்கும் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளைக் கவர்ந்து பிடிப்பதற்குப் பயன்படும் ஒரு எளிய பூச்சிக் கட்டுப்பாட்டு முறையாகும். இப்பொறியில் தண்ணீர் மற்றும் தேவைக்கேற்ப பூச்சிகளைக் கவரும் இனக்கவர்ச்சிப் பொருட்கள் அல்லது பொருத்தமான கவர்ச்சிப் பொருட்கள் பயன்படுத்தப் படுகின்றன. இதன் மூலம் பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணித்து அவற்றின் எண்ணிக்கையைக் குறைக்க முடியும்.

மேலும், வாளி பொறியை எவ்வாறு தயாரிப்பது, வயலில் எந்த இடத்தில் அமைப்பது, எவ்வளவு உயரத்தில் வைப்பது, அதனை எவ்வாறு பராமரிப்பது மற்றும் குறிப்பிட்ட கால இடைவெளியில் சுத்தம் செய்வது போன்ற செயல்முறை விளக்கங்கள் விவசாயி களுக்கு எடுத்துரைக்கப்பட்டன.

இத்தகைய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம் தேவையற்ற பூச்சிக்கொல்லி மருந்துகளின் பயன்பாட்டைக் குறைத்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகளைப் பின்பற்ற முடியும் என்றும் விளக்கப்பட்டது.

இந்தப் பயிற்சியின் மூலம் விவசாயிகள் குறைந்த செலவில் எளிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பூச்சிகளைக் கண்காணித்து கட்டுப்படுத்துவதற்கான நடைமுறை அறிவைப் பெற்றனர். இந்நிகழ்ச்சி விவசாயிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

கூடச்சேரி கிராமத்தில் வேளாண் மாணவர்கள் பங்கேற்புடன் கிராமப்புற பங்கேற்பு மதிப்பீட்டுத் திட்டம்!



நாமக்கல், நவ.5

தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த இறுதியாண்டு வேளாண் மாணவர்கள், தங்களது ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE – Rural Agricultural Work Experience) ஒரு பகுதியாக, நாமக்கல் மாவட்டம், பரமத்தி வட்டம், கூடச்சேரி கிராமத்தில் கிராமப்புற பங்கேற்பு மதிப்பீட்டுத் திட்டத்தை (Participatory Rural Appraisal – PRA) சிறப்பாக நடத்தினர்.

இந்த நிகழ்ச்சியில் கிராம மக்களின் முழுமையான பங்கேற்புடன் கிராமத்தின் சமூக அமைப்பு, இயற்கை வளங்கள், வேளாண் நிலை, முக்கியப் பயிர்கள், நீர்வள ஆதாரங்கள், வாழ்வாதார முறைகள், பொருளாதார நிலை மற்றும் கிராமத்தின் அடிப்படை வசதிகள் குறித்த தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

இதன் ஒரு பகுதியாக, சமூக வரைபடம் (Social Map), வள வரைபடம் (Resource Map), காலவரிசை வரைபடம் (Timeline), வென் வரைபடம் (Venn Diagram), செல்வநிலை வகைப்படுத்துதல் (Wealth Ranking), பருவகால வரைபடம் (Seasonal Calendar), பயிர் சாகுபடி கால அட்டவணை (Crop Calendar), நடமாட்ட வரைபடம் (Mobility Map) மற்றும் பிரச்சினை மரம் (Problem Tree) போன்ற பல்வேறு PRA கருவிகள் பயன்படுத்தப்பட்டன.

இந்த வரைபடங்கள் மற்றும் மதிப்பீட்டுக் கருவிகள் மூலம் கிராம மக்களின் வாழ்வாதாரம், ஆண் – பெண் மக்கள் தொகை விவரம், முக்கிய வேளாண் பயிர்கள், சாகுபடி முறைகள், விவசாயப் பணிகளின் கால அட்டவணை, நீர்ப்பாசன வசதிகள், போக்குவரத்து வசதிகள், கல்வி மற்றும் சுகாதார வசதிகள் குறித்த விவரங்கள் அறியப்பட்டன. மேலும், விவசாயிகள் எதிர்கொள்ளும் முக்கியப் பிரச்சினைகள், வேளாண் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் மற்றும் கிராமத்தின் எதிர்காலத் தேவைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

கிராம மக்களுடன் நேரடியாக உரையாடி, அவர்களின் அனுபவங்கள் மற்றும் கருத்துகளின் அடிப்படையில் கிராமத்தின்

தற்போதைய நிலை மதிப்பீடு செய்யப்பட்டது. இதன் மூலம் மாணவர்கள் கிராமப்புற மக்களின் வாழ்க்கை முறை, வேளாண் நடைமுறைகள் மற்றும் உள்ளூர் வளங்களின் பயன்பாடு குறித்து நடைமுறை அனுபவத்தைப் பெற்றனர். இத்தகைய PRA நிகழ்ச்சிகள் மூலம் கிராம மக்களின் பங்கேற்புடன் உள்ளூர் பிரச்சினைகளைக் கண்டறிந்து, அவற்றுக்கான தீர்வுகளை உருவாக்குவதற்கும், நிலையான கிராமப்புற மற்றும் வேளாண் வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும் அடித்தளமாக அமைகின்றன.

பட்டுத்துறை கிராமத்தில் விவசாயிகளுக்கு இயற்கை விவசாயப் பயிற்சி மற்றும் ஜீவாமிர்தம் செயல்விளக்கம்

சேலம், நவ.5



சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரத்திற்கு உட்பட்ட பட்டுத்துறை கிராமத்தில் விவசாயிகளுக்கு இயற்கை விவசாயம் குறித்த விழிப் புணர்வு மற்றும் பயிற்சி முகாம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் வேல்முருகன் தலைமை தாங்கி முகாமைத் தொடங்கி வைத்தார். தொடர்ந்து, உதவி வேளாண்மை அலுவலர் பிரகாஷ், இயற்கை விவசாயத்தின் அவசியம் மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார். அதனைத் தொடர்ந்து, திவ்யபாலா, இயற்கை விவசாய விளைபொருட்களுக்கு விவசாயிகள் எவ்வாறு அங்ககச் சான்று (Organic Certification) பெறுவது மற்றும் அதற்கான நடைமுறைகள் குறித்து விரிவான விளக்கம் அளித்தார்.

இப்பயிற்சியின் ஒரு பகுதியாக, தந்தை ரோவர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் இறுதியாண்டு மாணவிகள் பவித்ரா, மௌலிகா, நிாந்தி, மோனிா, மேகவர்த்தினி, முகிலா, நிவாஷினி மற்றும் முத்து அண்டிச்சி ஆகியோர் தங்களின் கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் ஜீவாமிர்தம் தயாரிக்கும் முறை குறித்து செயல்விளக்கம் செய்து காண்பித்தனர். இதில் ஜீவாமிர்தம் தயாரிக்கத் தேவையான பொருட்கள், தயாரிக்கும் படிநிலைகள் மற்றும் பயிர்களுக்குப் பயன் படுத்தும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு செயல்முறையாக விளக்கப்பட்டது. மேலும், ஜீவாமிர்தம் மண்ணில் உள்ள நன்மை செய்யும் நுண்ணுயிர்களின் செயல்பாட்டைப் பெருக்கி மண் வளத்தை எவ்வாறு மீட்டெடுக்கிறது என்பது பற்றியும் எடுத்துக் கூறப்பட்டது. இயற்கை இடுபொருட்களைப் பயன்படுத்தி மண் வளம்

மற்றும் பயிர் உற்பத்தியைப் பெருக்கும் வழிமுறைகளை விவசாயிகள் இப்பயிற்சியின் மூலம் ஆர்வமுடன் அறிந்து கொண்டனர். இப்பயிற்சியில் அப்பகுதியைச் சேர்ந்த ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

அட்மா திட்டத்தின் மூலம் உழவர்களுக்கு வயல்விழா

சேலம், நவ.5

சேலம் மாவட்டம், தூக்கநாயக்கன்பாளையம் வட்டாரத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் காசிபாளையம் கிராமத்தில் வயல்விழா நடத்தப்பட்டது. இந்த விழா–விற்கு காசிபாளையம், சிங்கிரிபாளையம், தடப்பள்ளி கிராமங் களிலிருந்து 100க்கும் மேற்பட்ட உழவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த வயல்விழாவை வேளாண்மை உதவி இயக்குநர் அமுதா தலைமையேற்று தொடங்கி வைத்து வேளாண் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் மத்திய மற்றும் மாநிலத் திட்டங்கள் குறித்தும், இயற்கை விவசாயம் செய்வதன் மூலம் மண் வளம் பாது காப்பதுடன் இடுபொருள் செலவுகளைக் குறைக்க முடியும் எனவும் தரமான உற்பத்தியை பெறமுடியும் எனவும் கூறினார். சிறப்பு விருந்தினராக ஜே.கே.கே.எம் வேளாண் கல்லூரியின் முதல்வர் டாக்டர் கல்யாணசுந்தரம், கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மேலும் 4ம் ஆண்டு பயிலும் வேளாண் கல்லூரி மாணவ மாணவி களின் கிராமப்புற விவசாயப்பணி அனுபவத் திட்டதையும் துவக்கி வைத்தார். இத்திட்டத்தின் கீழ் தூக்கநாயக்கன்பாளையம் வட்டார ஜே.கே.கே.எம் வேளாண் கல்லூரி, தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம், மற்றும் குமரகுரு வேளாண் கல்லூரி மாணவ மாணவிகள் கிராமத்தில் தங்கி பயின்று வருகின்றனர். மூன்று வேளாண் கல்லூரி மாணவ மாணவிகளும் வயல் விழாவில் கலந்து கொண்ட உழவர் களுக்கு பல்வேறு செயல்விளக்கங்கள் செய்து காண்பித்தனர். வேளாண்மை அறிவியல் நிலைய வல்லுநர் பச்சியப்பன் இயற்கை விவசாயம் செய்வது குறித்தும், உற்பத்தி செலவுகளை குறைப்பது குறித்தும் புதிய தொழில்நுட்பங்களை தெளிவாக எடுத்துரைத்தார். மேலும் தோட்டங்கலை அலுவலர் சவிதா, வேளாண் அலுவலர் ஆனந்தி, துணை வேளாண்மை அலுவலர் பழனிச்சாமி, கால்நடை பராமரிப்புத்துறை டாக்டர் கோவிந்தசாமி, வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறை உதவி அலுவலர் தமிழ்செல்வன், ஜே.கே. கே.எம் வேளாண் கல்லூரி உதவிப் பேராசிரியர்கள் தங்களது துறை சார்ந்த திட்டங்களையும் புதிய தொழில்நுட்பங்களையும் எடுத்துரைத் தனர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் சு.அரவிந்தன், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ரா.மணி கண்டன், மற்றும் காவேரி ஆகியோர் செய்திருந்தனர்.